# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1739/7 - 2012 ජනවාරි මස 03 වැනි අඟහරුවාදා - 2012.01.03

*1739/7 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### சப்பிரகமுவ மாகாண மாகாண சபை

*2012 ஆம் ஆண்டிற்கான சப்பிரகமுவ மாகாண சபையின் 05 ஆம் இலக்க*

ஒதுக்கீட்டு நியதிச் சட்டம்

*2012 ஆம் நிதியாண்டின் சேவைச் செலவினங்களுக்காக ஏற்பாடு செய்தல், அத்தகைய சேவைச் செலவினங்களுக்காக சப்பிரகமுவ மாகாணத்திற்குள் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரமளித்தல், அந்த நிதியாண்டிற்குள் சப்பிரகமுவ மாகாண சபையின் சில விவகாரங்கள் தொடர்பில் நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல், அந்த விவகாரங்கள் தொடர்பிலான செலவினங்களுக்காக அந்த நிதியாண்டிற்குள் தேவைப்படும் பணங்களை சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திலிருந்து அல்லது ஏனைய யாதாயினுமொரு நிதியத்திலிருந்து பணத்தொகைகளாக அல்லது முற்பணத்தொகைகளாக செலுத்துவதற்கு இடமளித்தல், சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திற்கு அப்பணங்களை மீளச் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்தல் மற்றும் மேற்கூறிய கருமங்களுடன் தொடர்புடைய அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுகளைச் செய்வதற்குமான ஒரு நிதியச் சட்டமாகும்.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாண சபையினால் பின்வருமாறு விதிக்கப்படுகின்றது.

*சுருக்கப் பெயரும் செயற்படும் திகதியும்.*

1. இந்நியதிச் சட்டம் சப்பிரகமுவ மாகாண சபையின் 2011 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச்சட்டமென அறிமுகப்படுத்தப்படுவதுடன் சப்பிரகமுவ மாகாணத்தின் ஆளுநர் அவர்களின் அங்கீகாரம் பெற்ற திகதி தொடக்கம் அது செயற்படும்.

*2012 ஆம் நிதி யாண்டிற்கான ஒதுக்கீடுகள்.*

2. (1) ஏதாவதொரு பணத்தொகையை செலவிடுவதற்கு அதிகாரமளிக்கின்ற வேறு ஏதேனுமொரு சட்டத்திற்குப் பங்கம் ஏற்படாதவாறு இந்நியதிச் சட்டத்தில் "2012 நிதியாண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற 2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி ஆரம்பமாகி 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் கால எல்லையின் சேவைச் செலவினங்களுக்காகத் தேவைப்படுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பதினாறாயிரத்தி முந்நூற்றி ஐந்து மில்லியன்களும் முந்நூற்றி இருபத்தி நான்காயிரம் ரூபாவான (16,305,324,000 ரூபா) சப்பிரகமுவ மாகாண சபையின் செலவினமானது:-

(அ) சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திலிருந்து அல்லது ஏனைய யாதாயினுமொரு நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து செலுத்துவதற்காக இத்தால் அதிகாரமளிக்கப் படுகின்ற கொடுப்பனவுகளாலும்,

(ஆ) சப்பிரகமுவ மாகாணத்திற்குள் கடன்களாகப் பெற்றுக் கொள்ளும் பணத்தொகைகளிலிருந்து அல்லது சப்பிரகமுவ மாகாண சபைக்காகப் பெற்றுக் கொள்வதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்ற கடன்களாகப் பெற்றுக் கொள்ளும் பணத்தொகைகளால் தீர்க்கப்படுதல் வேண்டும். இங்கு மேலே குறிப்பிடப்பட்ட பதினாறாயிரத்தி முந்நூற்றி ஐந்து மில்லியன்களும் முந்நூற்றி இருபத்தி நான்காயிரம் (16,305,324,000 ரூபா) ரூபாவான பணத்தொகை இந்நியதிச் சட்டத்தின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் அட்டவணையின் ஏற்பாடுகள் சப்பிரகமுவ மாகாண சபைக்காகவும் அதன்பேரில் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரமளிக்கப்படுகின்ற வேறு ஏதேனுமொரு எழுத்துமூலமான சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பங்கமேற்படாதவாறு செய்யப்படுதல் வேண்டும்.

*2012 ஆம் நிதியாண்டிற்காக சப்பிரகமுவ முவ மாகாண சபையின் சில விவகாரங்கள் தொடர்பில் நிதி வழங்குதல்.*

3. (1) 2012 ஆம் நிதியாண்டிற்குள் இந்நியதிச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் IV ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு விவகாரத்திலிருந்தும் சப்பிரகமுவ மாகாண சபை பெறும் VI ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுகைகள் அவ்விவகாரத்தின் கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டுமென்பதுடன் அவ்வாறு வரவு வைக்கப்பட்ட பெறுகைகளின் கூட்டுமொத்தத் தொகையானது அந்த அட்டவணையின் VI ஆம் நிரலின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்குறைந்த எல்லைக்குக் குறைவடையாதிருத்தல் வேண்டும். அவ்வாறு பெறும் தூய மேன்மிகை ஏதுமிருப்பின் அது 2012 ஆம் நிதியாண்டு முடிவடைந்து ஆறு மாதங்கள் செல்வதற்கு முன் சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) 1 ஆம் உட்பிரிவின் கீழ் தூய மேன்மிகையைத் தீர்மானிப்பதற்காக கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள், அதாவது -

(அ) ஏதாவதொரு விவகாரத்தின் வருமானத்திற்கு வரவேண்டியதாக முறைப்படி செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படவுள்ளதான அவ்விவகாரத்தின் தொழிற்பாட்டுத் தாபன மற்றும் ஏனைய செலவினங்கள் ; அத்துடன்

(ஆ) ஏதாவதொரு விவகாரத்தின் அசைவற்ற மற்றும் அசைவுள்ள ஆதனங்கள் தொடர்பிலான தேய்மாணத்தை மேவுவதற்கான ஏற்பாட்டு நிதியை அந்த ஒவ்வொரு விவகாரத்தினதும் வருமானத்திலிருந்தும் குறைத்துக் கொள்ளப்படல் வேண்டும்.

4. இந்நியதிச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் IV ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு விவகாரம் தொடர்பிலும் 2012 ஆம் நிதியாண்டிற்குள் சப்பிரகமுவ மாகாண சபையினால் செய்யப்படும் செலவினங்கள், அந்த நிதியாண்டிற்குள் அத்தகைய விவகாரங்கள் மூலம் சப்பிரகமுவ மாகாண சபை பெறும் பெறுகைகளிலிருந்து செலுத்தப்படல் வேண்டும். அவ்வாறாயினும், அத்தகைய செலவினங்கள் அந்த அட்டவணையின் V ஆம் நிரலின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

5. இந்நியதிச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் IV ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள ஏதாவதொரு விவகாரம் தொடர்பில் 2012 ஆம் நிதியாண்டின் இறுதியில் நிலுவையாகவுள்ள பற்று மீதி, அந்த அட்டவணையின் VII ஆம் நிரலின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். அத்துடன் அந்த நிதியாண்டின் இறுதியில் அந்த விவகாரத்தின் மொத்தப் பொறுப்புக்கள் அந்த அட்டவணையின் VIII ஆம் நிரலின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

*2012 ஆம் நிதியாண்டிற்குள் 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விவகாரங்கள் தொடர்பிலான செலவினங்களுக்காக சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திலிருந்து அல்லது சப்பிரகமுவ மாகாண சபையினால் தகுந்ததென்று செய்யப்படக்கூடிய ஏனையவொரு நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணங்களைச் செலுத்தல்.*

6. 2012 ஆம் நிதியாண்டிற்குள் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் இந்நிதிச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் IV ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள ஏதாவதொரு விவகாரத்தின் மூலம் சப்பிரகமுவ மாகாண சபை பெறும் பெறுகைகள், அவ்விவகாரம் தொடர்பில் சப்பிரகமுவ மாகாண சபையினால் செய்யப்பட்ட செலவினங்களை நிவர்த்தி செய்வதற்குப் போதாமையாக இருப்பின், அச்செலவினங்களை நிவர்த்தி செய்வதற்காகவென அமைச்சர் கருதும் பணத்தொகைகளை சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திலிருந்து அல்லது சப்பிரகமுவ மாகாண சபையினால் தகுந்ததென்று செய்யப்படக்கூடிய ஏனையவொரு நிதியத்திலிருந்து அல்லது முற்பணங்களாகக் செலுத்தப்பட வேண்டுமென அவரால் காலத்துக்குக் காலம் கட்டளைமூலம் பணிப்பிடப்படலாம். ஆயினும், அவ்வாறு கொடுக்கப்படும் முற்பணங்களின் கூட்டுமொத்தத் தொகையானது அந்த அட்டவணையின் V ஆம் நிரலில் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய செலவின எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். அத்தகைய விவகாரத்தின் பேரில் முற்பணங்களாக அவ்வாறு கொடுக்கப்பட்ட பணத்தொகைகள் எதுவும் அமைச்சரால் கட்டளைமூலம் பணிப்பிடப்படும் வகையில் சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திற்கு மீளச் செலுத்தப்படல் வேண்டும்.

*7. (1) இந்நியதிச் சட்டத்தின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு தலைப்பின் கீழ் காட்டப்படும் ஏதாவதொரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மீண்டுவரும் செலவினங்களுக்கு அந்த அட்டவணையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒதுக்கப்பட்டுள்ளதும், ஆனால் செலவு செய்யப்படாததுமான அல்லது எதிர்காலத்திலும் செலவாகாதென எதிர்பார்க்கக்கூடியதுமான ஏதாவதொரு பணத்தொகை அந்நிகழ்ச்சித் திட்டத்திலேயான மூலதனச் செலவினங்களாக அல்லது ஏனையவொரு நிகழ்ச்சித் திட்டத்தின் மீண்டுவரும் அல்லது மூலதனச் செலவினங்களாக ஒதுக்குவதற்குப் பிரதான செயலாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஏனையவொரு உத்தியோகத்தரின் கட்டளைப்படி மாற்றப்படலாம்.*

*நிகழ்ச்சித்திட்டம் மீண்டுவரும் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட போதிலும் செலவிடப்படாத பணத் தொகைகள் அந்த நிகழ்ச்சித் திட்டத்திலேயான ஏனையவொரு ஒதுக்கத்திற்கு அல்லது அந்த செலவினத் தலைப்பின் கீழேயான ஏனையவொரு நிகழ்ச்சித் திட்டத்திற்கு மாற்றும் அதிகாரம்.*

*(2) இந்நியதிச் சட்டத்தின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு தலைப்பின் கீழ் காட்டப்படும் மூலதனச் செலவினத்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை அந்த தலைப்பின் நிகழ்ச்சித் திட்டத்திற்கு அல்லது கருத்திட்டத்துக்கு வெளியே மாற்றம் செய்தலை பிரதான செயலாளருக்கு மாத்திரம் செய்யப்படலாம்.*

*8. (1) அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களை மேற்கொள்வதற்காக வரிகளிலிருந்தும் ஏனைய மூலங்களிலிருந்தும் பெறப்படும் வரவுகள், எதிர்பார்க்கப்பட்ட பணத்தொகைகளைவிடக் குறைவடையலாம் என்பதற்கு அல்லது,*

*(2) ஏதாவதொரு விவகாரத்திற்காக அல்லது விவகாரங்களுக்காக முதலில் ஒதுக்கப்பட்ட பணத்தொகைகள் மேலும் தேவைப்பட மாட்டாதென அமைச்சர் திருப்பதியடையும் சந்தர்ப்பத்தில் சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திலிருந்து அல்லது சப்பிரகமுவ மாகாண சபையினால் தகுந்ததொன்று செய்யப்படக்கூடிய ஏனையவொரு நிதியத்திலிருந்து அல்லது பணத்தொகைகளிலிருந்து தம்மால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரம் ஒன்றின் அதிகாரத்தின் கீழ் செலவிடுவதற்காக முன்னர் விடுவிக்கப்பட்ட பணத்தொகைகள் முழுமையாக அமைச்சரால் சப்பிரகமுவ மாகாண சபையின் அங்கீகாரத்துடன் நீக்கிக் கொள்ளப்படலாம்.*

*9. அமைச்சரால் சப்பிரகமுவ மாகாண சபையின் அங்கீகாரத்துடன் :-*

*இந்நியதிச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய மற்றும் ஆகக்குறைந்த எல்லைகளை மாற்றுவதற்கு அமைச்சருக்குள்ள அதிகாரம்.*

*(அ) இந்நியதிச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் V ஆம் , VII ஆம், VIII ஆம் நிரல்களில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைகளுள் எதனையும்,*

*(ஆ) இந்நியதிச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் VI ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள ஆகக்குறைந்த எல்லைகளையும் கட்டளைகள் மூலம் 2013 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் வேறுபடுத்தப்படலாம் அல்லது மாற்றப்படலாம்.*

இப்பிரிவின் கீழ் ஆக்கப்படும் கட்டளை எதுவும் சப்பிரகமுவ மாகாண சபையினால் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரிக்கப்பட்டாலன்றி செல்லுபடியாகாதிருத்தல் வேண்டும்.

*அத்தகைய கட்டளை எதுவும் எத்தினத்தில் இடப்படுகின்றதோ அத்தினத்திற்கு முன்னரானவொரு திகதியிலிருந்து அது செல்லுபடியாதல் வேண்டுமென அதில் குறித்துரைக்கப்பட்டிருந்தால் அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட திகதி தொடக்கம் அது செயற்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.*

*10. சப்பிரகமுவ மாகாண சபையினால் தீர்மானம் அங்கீகரிக்கப்படுதல் மூலம் இந்நியதிச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் உகந்த நிரல்களுக்கு ஏதாவதொரு விவகாரத்தைச் சேர்ப்பதன் மூலமும்,*

*(அ) அவ்விவகாரம் தொடர்பிலான எல்லா ஆகக்கூடிய எல்லைகள் அல்லது அவற்றின் எதனையும் ;*

*(ஆ) அவ்விவகாரம் தொடர்பிலான ஆக்குறைந்த எல்லையைச் சேர்ப்பதன் மூலமும் அந்த அட்டவணை திருத்தப்படலாம்.*

***முதலாம் அட்டவணை***

***மாகாண சபையின் பொதுச் சேவைகளுக்கான செலுத்த வேண்டிய பணத்தொகைகள்***

*தலைப்பு 800 தொடக்கம் 861 வரை*

| | ரூபா |
|---|---|
| மீண்டுவரும் செலவினங்கள் | 13,750,324,000.00 |
| மூலதனச் செலவினங்கள் | 2,555,000,000.00 |
| மொத்தம் | 16,305,324,000.00 |

| | செலவின விபரம் | மீண்டும்வரும் செலவினங்கள் | மூலதனச் செலவினங்கள் |
|---|---|---|---|
| தலைப்பு | 800 - கௌரவ ஆளுநர் அவர்கள் | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03 - மாகாண சபை நிர்வாகம் | 46,019,000.00 | 5,000,000.00 |
| தலைப்பு | 801 - மாகாண சபைச் செயலகம் | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03 - மாகாண சபை நிர்வாகம் | 123,913,000.00 | 1,000,000.00 |
| தலைப்பு | 802 - மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03- மாகாண சபை நிர்வாகம் | 11,607,000.00 | 5,00,000.00 |
| தலைப்பு | 803 - கூட்டுறவு ஆணைக்குழு | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03- மாகாண சபை நிர்வாகம் | 4,163,000.00 | - |
| தலைப்பு | 804 - பிரதான செயலாளர் | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03 - மாகாண சபை நிர்வாகம் | 197,015,000.00 | 1,108,500,000.00 |
| தலைப்பு | 805 - பிரதி பிரதான செயலாளர் (நிர்வாகம்) | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03- மாகாண சபை நிர்வாகம் | 23,548,000.00 | - |
| தலைப்பு | 806 - பிரதி பிரதான செயலாளர் (நிதி முகாமை) | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03 - மாகாண சபை நிர்வாகம் | 23,942,000.00 | - |
| தலைப்பு | 807 - பிரதி பிரதான செயலாளர் (திட்டமிடல்) | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03- மாகாண சபை நிர்வாகம் | 14,089,000.00 | - |
| தலைப்பு | 808 - பிரதி பிரதான செயலாளர் (பொறியியற் சேவைகள்) | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 50- நிர்மாணிப்பு மற்றும் பெருந்தெருக்களைப் பேணுதல் | 119,307,000.00 | - |
| தலைப்பு | 809 - மாகாண வருமானத் திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 03 - மாகாண சபை நிர்வாகம் | 33,793,000.00 | - |
| தலைப்பு | 810 - நீதி, சமாதானம், நிதி, திட்டமிடல், உள்ளூராட்சி, கல்வி, தகவல் தொழில்நுட்பம், செய்திகள், கலாசார, மின்சக்தி, வீடமைப்பு நிர்மாணத்துறை, கூட்டுறவு, வர்த்தக உணவு, பயணிகள் போக்குவரத்து மற்றும் தோட்ட நலன்புரி, சுற்றாடல் மற்றும் மீன் பிடித்துறை அமைச்சு | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண சபை நிர்வாகம் | 88,280,000.00 | 13,000,000.00 |
| | நிகழ்ச்சித் திட்டம் 47 - பயணிகள் போக்குவரத்து | - | 17,000,000.00 |
| | நிகழ்ச்சித் திட்டம் 49 - மின்சக்தி மற்றும் எரிசக்திச் சேவைகள் | - | 17,000,000.00 |
| | நிகழ்ச்சித் திட்டம் 55 - உணவுப் பாதுகாப்பு | - | 10,000,000.00 |
| | நிகழ்ச்சித் திட்டம் 60 - சமூக அபிவிருத்தி | - | 133,000,000.00 |
| | நிகழ்ச்சித் திட்டம் 61 - வீட்டு மற்றும் சமூக வசதிகள் | 4,541,000.00 | 15,000,000.00 |
| | நிகழ்ச்சித் திட்டம் 63 - தோட்ட அடிப்படை வசதிகள் | - | 20,000,000.00 |
| | நிகழ்ச்சித் திட்டம் 80 - ஆரம்பக் கல்வி | - | 162,000,000.00 |

| | செலவின விபரம் | மீண்டும்வரும் செலவினங்கள் | மூலதனச் செலவினங்கள் |
|---|---|---|---|
| | நிகழ்ச்சித் திட்டம் 81 - இரண்டாந்தரக் கல்வி | - | 302,000,000.00 |
| | நிகழ்ச்சித் திட்டம் 93 - சமய மற்றும் கலாசார விவகாரங்கள் | 2,345,000.00 | 15,000,000.00 |
| தலைப்பு | 811- கல்வித் திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண சபை நிர்வாகம் | 257,303,000.00 | - |
| | நிகழ்ச்சித் திட்டம் 80 - ஆரம்பக் கல்வி | 2,460,630,000.00 | - |
| | நிகழ்ச்சித் திட்டம் 81 - இரண்டாந்தரக் கல்வி | 5,269,568,000.00 | - |
| | நிகழ்ச்சித் திட்டம் 87 - கல்வியியல் ஈடுபடுதலை மேம்படுத்தல் | 10,985,000.00 | - |
| | நிகழ்ச்சித் திட்டம் 88 - கல்வித்திட்டமிடல், நிர்வாகம் மற்றும் சேவைகளை வழங்குதல் | 13,750,000.00 | - |
| தலைப்பு | 812- உள்ளூராட்சித் திணைக்களம் | | |
| - | நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண சபை நிர்வாகம் | - | - |
| | நிகழ்ச்சித் திட்டம் 60 - சமூக அபிவிருத்தி | 951,431,000.00 | - |
| தலைப்பு | 813 - கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 53 - கூட்டுறவு அபிவிருத்தி | 60,314,000.00 | - |
| தலைப்பு | 820 - மாகாண தெருக்கள் அபிவிருத்தி கிராமிய அடிப்படை வசதிகள் மற்றும் உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சு | - | - |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண சபை நிர்வாகம் | 29,825,000.00 | - |
| | நிகழ்ச்சித் திட்டம் 50 - நிர்மாணத்துறை மற்றும் பெருந்தெருக்களைப் பேணுதல் | 225,000,000.00 | 242,000,000.00 |
| | நிகழ்ச்சித் திட்டம் 52 - பிரதேச அபிவிருத்தி | - | 43,000,000.00 |
| | நிகழ்ச்சித் திட்டம் 90 - உல்லாச விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை | - | 28,000,000.00 |
| தலைப்பு | 830 - சமூக நலன்புரி, நன்னடத்தைகள், சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சு | - | - |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண சபை நிர்வாகம் | 27,344,000.00 | - |
| | நிகழ்ச்சித் திட்டம் 51 - கைத்தொழில் அபிவிருத்தி | - | 14,000,000.00 |
| | நிகழ்ச்சித் திட்டம் 60- சமூக அபிவிருத்தி விவகாரங்கள் | 43,665,000.00 | 7,000,000.00 |
| | நிகழ்ச்சித் திட்டம் 95- சமூகப் பாதுகாப்பு | - | 36,000,000.00 |
| தலைப்பு | 831 - கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 51- கைத்தொழில் அபிவிருத்தி | 102,773,000.00<br>134,609,000.00 | -<br>- |
| தலைப்பு | 831 - சமூக சேவைகள் திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித்திட்டம் 95- சமூகப் பாதுகாப்பு | 134,609,000.00 | - |

| | செலவின விபரம் | மீண்டும்வரும் செலவினங்கள் | முலதனச் செலவினங்கள் |
|---|---|---|---|
| தலைப்பு | 833 - நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 95- சமூகப் பாதுகாப்பு | 42,058,000.00 | - |
| தலைப்பு | 840 - சுகாதார, உள்நாட்டு வைத்திய மற்றும் மகளிர் விவகார அமைச்சு | - | - |
| | நிகழ்ச்சித் திட்டம் 03- மாகாண சபை நிருவாகம் | 32,854,000.00 | 1,700,000.00 |
| | நிகழ்ச்சித் திட்டம் 71 - வைத்தியசாலைச் சேவைகள் | - | 127,700,000.00 |
| | நிகழ்ச்சித் திட்டம் 72 - பொது சுகாதார சேவைகள் | - | 60,600,000.00 |
| | நிகழ்ச்சித் திட்டம் 73 - உள்நாட்டு வைத்திய சேவைகள் | - | 34,000,000.00 |
| | நிகழ்ச்சித் திட்டம் 96 - மகளிர் விவகாரங்கள் | - | 10,000,600.00 |
| தலைப்பு | 841 - சுகாதாரத் திணைக்களம் | - | - |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண சபை நிர்வாகம் | 111,389,000.00 | - |
| | நிகழ்ச்சித் திட்டம் 71 - வைத்தியசாலைச் சேவைகள் | 2,158,763,000.00 | - |
| | நிகழ்ச்சித் திட்டம் 72 - பொது சுகாதார சேவைகள் | 604,196,000.00 | - |
| தலைப்பு | 842 - ஆயுர்வேதத் திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 73 - உள்நாட்டு வைத்திய சேவைகள் | 213,185,000.00 | - |
| தலைப்பு | 850 - காணி, மாகாண நீர்ப்பாசன, விவசாய, விலங்கு உற்பத்தி மற்றும் விலங்கு சுகாதார, சுற்றாடல் விவகார மற்றும் மீன் பிடித்துறை அமைச்சு | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண சபை நிர்வாகம் | 34,302,000.00 | 13,000,000.00 |
| | நிழ்ச்சித் திட்டம் 43 - நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமை | - | 23,000,000.00 |
| | நிழ்ச்சித் திட்டம் 44 - விவசாய அபிவிருத்தி | - | 47,000,000.00 |
| | நிழ்ச்சித் திட்டம் 45 - கால்நடை வளங்கள் அபிவிருத்தி | - | 25,000,000.00 |
| | நிழ்ச்சித் திட்டம் 90 - உல்லாச விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை | - | 24,000,000.00 |
| தலைப்பு | 851 - காணி, ஆணையாளர் திணைக்களம்<br>நிழ்ச்சித் திட்டம் 40 - காணி நிர்வாகம் மற்றும் அபிலிருத்தி | 16,765,000.00 | - |
| தலைப்பு | 852 - விவசாயத் திணைக்களம்<br>நிழ்ச்சித் திட்டம் 44 - விவசாய அபிவிருத்தி | 118,218,000.00 | - |
| தலைப்பு | 853 - விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்<br>நிழ்ச்சித் திட்டம் 45 - கால்நடை வளங்கள் அபிவிருத்தி | 113,011,000.00 | - |
| தலைப்பு | 854 - விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்<br>நிழ்ச்சித் திட்டம் 90 - உல்லாச விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை | 12,712,000.00 | - |
| தலைப்பு | 861 - மாகாண உள்ளக கணக்காய்வுத் திணைக்களம்<br>நிழ்ச்சித் திட்டம் 03 - மாகாண சபை நிர்வாகம் | 13,112,000.00 | - |
| | மொத்தம் | 13,750,324,000.00 | 2,555,000,000.00 |

**2012 - மதிப்பீடுகள்**

இரண்டாம் அட்டவணை

**முற்பணக் கணக்கு விவகாரங்கள்**

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| இல. | அமைச்சுத்/ திணைக்களம் | விடய இல. | முற்பண வர்க்கம் | செலவினங்களின் உச்ச எல்லை | பெறுகைகளின் ஆகக்கூடிய எல்லை | பற்று மீதிகளின் உச்ச எல்லை | பொறுப்புக் களின் உச்ச எல்லை |
| | மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் : | | | | | | |
| 1. | ஆளுநர் அவர்களின் அலுவலகம் | 8001 | மாகாண அ. உ. முற் பணங்கள் | 2,000,000 | 450,000 | 4,600,000 | |
| 2. | மாகாண சபை செயலகம் | 8011 | மாகாண அ. உ. முற் பணங்கள் | 2,000,000 | 500,000 | 7,000,000 | |
| 3. | மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழு | 8021 | மாகாண அ. உ. முற் பணங்கள் | 2,000,000 | 600,000 | 5,000,000 | |
| 4. | கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு | 8031 | மாகாண அ. உ. முற் பணங்கள் | 1,000,000 | 150,000 | 2,000,000 | |
| 5. | பிரதான செயலாளர் | 8041 | மாகாண அ. உ. முற் பணங்கள் | 25,000,000 | 7,500,000 | 70,000,000 | |
| 6 | பொறியியற் சேவைகள் திணைக்களம் | 8081 | மாகாண அ. உ. முற் பணங்கள் | 25,000,000 | 5,500,000 | 35,000,000 | |
| 7. | வருமானத் திணைக்களம் | 8091 | மாகாண அ. உ. முற் பணங்கள் | 4,000,000 | 1,000,000 | 9,000,000 | |
| 8. | முதலமைச்சர் மற்றும் நீதி, சமாதானம், நிதி, திட்டமிடல், உள்ளூராட்சி, கல்வி, தகவல் தொழில் நுட்பம், ஊடக, கலாசார, மின் சக்தி, வீடமைப்பு, நிர்மாணத்துறை, கூட்டுறவு, வர்த்தக உணவு, பயணிகள் போக்குவரத்து மற்றும் தோட்ட நலன்புரி ,சுற்றாடல் மற்றும் மீன்பிடித் தொழில் அமைச்சு | 8101 | மாகாண அ. உ. முற் பணங்கள் | 7,500,000,000 | 1,500,000 | 16,000,000 | |
| 9. | கல்வித் திணைக்களம் | 8111 | மாகாண அ. உ. முற் பணங்கள் | 350,000,000 | 200,000,000 | 450,000,000 | |

**இரண்டாம் அட்டவணை** *(தொடர்ச்சி)*

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| இல. | அமைச்சு/ திணைக்களம் | விடய இல. | முற்பண வர்க்கம் | செலவினங்களின் உச்ச எல்லை | பெறுகைகளின் ஆகக்கூடிய எல்லை | பற்று மீதிகளின் உச்ச எல்லை | பொறுப்புக் களின் உச்ச எல்லை |
| 10. | உள்ளூராட்சித் திணைக்களம் | 8121 | மாகாண அ. உ. முற் பணங்கள் | 3,500,000 | 1,200,000 | 7,500,000 | |
| 11. | கூட்டுறவு அபி விருத்தித் திணைக்களம் | 8131 | மாகாண அ. உ. முற் பணங்கள் | 6,000,000 | 2,000,000 | 9,000,000 | |
| 12. | மாகாண தெருக்கள் அபிவிருத்தி, கிரா மிய அடிப்படை வசதிகள் மற்றும் உல்லாசப் பிரயா ணத்துறை அமைச்சு | 8201 | மாகாண அ. உ. முற் பணங்கள் | 3,000,000 | 1,200,000 | 6,000,000 | |
| 13. | சமூக நலன்புரி, நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு கிராம அபிவிருத்தி கிராமியக் கைத் தொழில் அமைச்சு | 8301 | மாகாண அ. உ. முற் பணங்கள் | 6,000,000 | 1,800,000 | 10,000,000 | |
| 14. | கைத்தொழில் அபி விருத்தித் திணைக் களம் | 8311 | மாகாண அ. உ. முற் பணங்கள் | 9,000,000 | 3,600,000 | 10,000,000 | |
| 15. | சமூக சேவைகள் திணைக்களம் | 8321 | மாகாண அ. உ. முற் பணங்கள் | 1,000,000 | 300,000 | 2,000,000 | |
| 16. | நன்னடத்தை மற்றும் சிறுவர் பாது காப்புத் திணைக் களம் | 8331 | மாகாண அ. உ. முற் பணங்கள் | 4,000,000 | 1,200,000 | 5,000,000 | |
| 17. | சுகாதார, உள்நாட்டு வைத்தியம் மற்றும் மகளிர் விவகார அமைச்சு | 8401 | மாகாண அ. உ. முற் பணங்கள் | 2,500,000 | 1,500,000 | 9,000,000 | |
| 18. | சுகாதாரத் திணைக்களம் | 8411 | மாகாண அ. உ. முற் பணங்கள் | 200,000,000 | 55,000,000 | 120,000,000 | |

**இரண்டாம் அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *i* | *ii* | *iii* | *iv* | *v* | *vi* | *vii* | *viii* |
|---|---|---|---|---|---|---|---|
| *இல.* | *அமைச்சு/ திணைக்களம்* | *விடய இல.* | *முற்பண வர்க்கம்* | *செலவினங்களின் உச்ச எல்லை ரூபா* | *பெறுகைகளின் ஆகக்கூடிய எல்லை ரூபா* | *பற்று மீதிகளின் உச்ச எல்லை ரூபா* | *பொறுப்புக் களின் உச்ச எல்லை ரூபா* |
| 19. | ஆயுர்வேதத் திணைக்களம் | 8421 | மாகாண அ. உ. முற் பனங்கள் | 8,000,000 | 6,000,000 | 18,000,000 | |
| 20. | காணி, மாகாண நீர்ப்பாசன, விவசாய, விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார, விளை யாட்டுத்துறை மற்றும் இளை ஞர் விவகார அமைச்சு | 8501 | மாகாண அ. உ. முற் பனங்கள் | 3,500,000 | 1,400,000 | 12,000,000 | |
| 21. | காணி, ஆணையாளர் திணைக்களம் | 8511 | மாகாண அ. உ. முற் பனங்கள் | 1,200,000 | 700,000 | 3,000,000 | |
| 22. | விவசாயத் திணைக் களம் | 8521 | மாகாண அ. உ. முற் பனங்கள் | 15,000,000 | 7,200,000 | 20,000,000 | |
| 23. | விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | 8531 | மாகாண அ. உ. முற் பனங்கள் | 9,500,000 | 3,600,000 | 13,000,000 | |
| 24. | விளையாட்டு அபி விருத்தித் திணைக் களம் | 8541 | மாகாண அ. உ. முற் பனங்கள் | 1,000,000 | 200,000 | 2,000,000 | |
| | உப மொத்தம் | | | 691,700,000 | 304,100,000 | 845,100,000 | |
| 25. | மாகாண சபைச் செயலகம் | 8012 | மாகாண உறுப்பினர் களுக்கான பலவின முற்பணங்கள் | 3,760,000 | 4,224,000 | 13,036,000 | |
| 26. | பிரதி பிரதான செயலாளர் பொறியியற் சேவைகள் | 8011 | செய்த வேலைகளுக் கான முற்பணக் கணக்குகள் | 12,500,000 | 5,000,000 | 6,500,000 | 1,000,000 |
| 27. | முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையம் பஸ்ஸெல்ல | 8052 | பயிற்சி நிலைய முற் பணக் கணக்குகள் | 2,500,000 | 2,200,000 | 500,000 | |

**இரண்டாம் அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *i* | *ii* | *iii* | *iv* | *v* | *vi* | *vii* | *viii* |
|---|---|---|---|---|---|---|---|
| இல. | அமைச்சு/ திணைக்களம் | விடய இல. | முற்பண வர்க்கம் | செலவினங்களின் உச்ச எல்லை | பெறுகைகளின் ஆகக்கூடிய எல்லை | பற்று மீதிகளின் உச்ச எல்லை | பொறுப்புக் களின் உச்ச எல்லை |
| 28. | முதலமைச்சர் மற்றும் நீதி,சமாதானம், நிதி, திட்டமிடல், உள்ளூராட்சி, கல்வி, தகவல் தொழில் நுட்பம், ஊடக, கலாசார, மின் சக்தி, வீடமைப்பு, நிர்மாணத்துறை, கூட்டுறவு, வர்த்தக, உணவு, பயணிகள் போக்குவரத்து மற்றும் தோட்ட நலன் புரி, சுற்றாடல் மற்றும் மீன்பிடித் தொழில் அமைச்சு | 8102 | அச்சக முற்பணக் கணக்குகள் | 3,000,000 | 1,000,000 | 2,800,000 | 500,000 |
| 29. | முதலமைச்சர் மற்றும் நீதி, சமாதானம், நிதி, திட்டமிடல், உள்ளூராட்சி, கல்வி, தகவல் தொழில் நுட்பம், கலாசார, மின் சக்தி, வீடமைப்பு, நிர்மாணத்துறை, கூட்டுறவு, வர்த்தக, உணவு, பயணிகள் போக்குவரத்து, மற்றும் தோட்ட நலன்புரி, சுற்றாடல் மற்றும் மீன் பிடித் தொழில் அமைச்சு | 8102 | கணினிக் கருத்திட்டம் | 800,000 | 300,000 | 200,000 | 50,000 |
| 30. | முதலமைச்சர் மற்றும் நீதி,சமாதானம், நிதி, திட்டமிடல், உள்ளூராட்சி, கல்வி, தகவல் தொழில் நுட்பம், ஊடக கலாசார, மின்சக்தி வீடமைப்பு, நிர்மாணத்துறை, கூட்டுறவு, வர்த்தக, உணவு, பயணிகள் போக்குவரத்து மற்றும் தோட்ட நலன்புரி, சுற்றாடல் மற்றும் மீன் பிடித் தொழில் அமைச்சு | 8102 | மெனேரிபிட்டிய அட்டுலுகம கல்வி அபிவிருத்தி மத்திய நிலையம் | 3,100,000 | 1,000,000 | 2,000,000 | 100,000 |

**இரண்டாம் அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *i* | *ii* | *iii* | *iv* | *v* | *vi* | *vii* | *viii* |
|---|---|---|---|---|---|---|---|
| இல. | அமைச்சு/ திணைக்களம் | விடய இல. | முற்பண வர்க்கம் | செலவினங்களின் உச்ச எல்லை | பெறுகைகளின் ஆகக்கூடிய எல்லை | பற்று மீதிகளின் உச்ச எல்லை | பொறுப்புக் களின் உச்ச எல்லை |
| 31. | கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | 8312 | நெசவுத் தொழிற் சாலைகளை ஸ்தாபித்தல் மற்றும் பேணுதல் | 15,000,000 | 5,000,000 | 3,000,000 | 1,000,000 |
| 32. | கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | 8313 | சிறு கைத்தொழில் நிலையங்கள் ஸ்தாபித்தல் மற்றும் நிருவகித்தல் | 5,000,000 | 2,500,000 | 2,500,000 | 500,000 |
| 33. | ஆயுர்வேத திணைக்களம் | 8422 | பின்னவல பஞ்சவீத சிகிச்சை பயிற்சி நிலையம் | 2,800,000 | 3,700,000 | 940,000 | 400,000 |
| | உப மொத்தம் | | | 48,460,000 | 24,924,000 | 31,476,000 | 3,550,000 |
| | கூட்டு மொத்தம் | | | 740,160,000 | 329,024,000 | 876,576,000 | 3,550,000 |

1- 424

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.